அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 343

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
25, செப்டெம்பர், 1986.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரசாங்கக் கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்.

பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட அல்லது பயங்கரவாதச் செயல்நிமித்தம் காணாமற்போன, தரைப் படை, பொலிசு சார்ந்த ஆளணியினர், அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனப் பணியாளர்கள் ஆகியோரில் சார்ந்திருப்போர்க்கு இழப்பீடு வழங்கல்.

---

பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட அல்லது பயங்கரவாதச் செயல்நிமித்தம் காணாமற்போன தரைப் படை அல்லது பொலிசு சார்ந்த ஆள், அரசாங்க உத்தியோகத்தர், அரசாங்க கூட்டுத்தாபனப் பணியாளர் என்றின்னோரின் வாழ்க்கைத் துணை/சார்ந்திருப்போர்க்கு, காணாது போன ஆளின் வேதனமும் படிகளும் அவர் உள்ள இடம் அல்லது அவரின் விதி தாபிக்கப்படும் வரை அல்லது 55 ஆண்டு எய்தும் வரை இவற்றுள் எது முந்தியதோ அக் காலம் வரையும் வழங்கப்படல் வேண்டும்.

02. உத்தியோகத்தர் 55ஆம் வயதை அடைந்த பின்னர் அவருக்குரியதான இளைப்பாற்று அவரின் வாழ்க்கைத் துணைக்கு/அவரைச் சார்ந்திருப்போர்க்கு வழங்கப்படல் வேண்டும்.

ஒப்பம்; டி.பி.ஜ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.